**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 134/2010** நாள் 11.12.2023

வாசா.2, திருமதி.ஆண்டாள்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை—**

நான் 12ம்வகுப்பு வரை படித்துள்ளேன் . எனது பிறந்ததேதி 05.02.1976. மேற்படி பிறந்த தேதி சரியானதுதானா என்று எனது பள்ளிசான்றிதழ்களை பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான் . ஆதார் கார்டிலும் இந்த பிறந்த தேதிதான் உள்ளது . நான் பிறந்து வளர்ந்தது நல்லமநாயக்கன்பட்டி என்றால் சரிதான் . என் தாயார் பெயர் சீனியம்மாள். எனது கணவரின் தாயார் பெயர் கோப்பம்மாள் . 1ம் வாதியின் தாயார் பெயர் பாப்பம்மாள் என்றால் சரிதான் . பாப்பம்மாள் மற்றும் கோப்பம்மாள் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனவே 1ம் வாதி எனக்கு சின்னம்மா முறை என்றால் சரிதான் . உறவினர் என்பதால் 1ம் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. தெரிந்த விவரத்தை சொல்கிறேன் . என்னுடைய திருமண தேதி என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை . திருமண வருடமும் ஞாபகமில்லை . திருமணமாகி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 25 வருடங்கள் ஆகிறது . எனக்கு திருமணம் நடக்கும்போது என்ன வயது என்றால் 28. திருமணம் ஆனது முதல் நாச்சியார்பட்டியில் என் கணவர் வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான் . அதற்கு முன்பு நாச்சியார்பட்டியில் குடியிருந்தற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . 1ம் வாதியின் கணவர் பெயர் தர்மராஜ் . அவருடன் பிறந்தவர்கள் 1ம் பிரதிவாதி ஸ்ரீராமலு மற்றும் செல்வராஜ் . தர்மராஜ் ஸ்ரீராமலு ,செல்வராஜ் ஆகியோரின் தந்தை பெயர் பெருமாள்சாமி . பெருமாள்சாமியுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் தெரியாது . பெருமாள்சாமி அவரது சகோதரர்களுடன் எப்போது பாகம் செய்தார் என்றால் எனக்கு தெரியாது . பெருமாள்சாமிக்கு என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது . பெருமாள்சாமி தனது மகன்களுக்கு சொத்துக்களை பிரித்து கொடுத்தாரா என்றால் தெரியாது. பெருமாள்சாமி எப்போது இறந்தார் என்றால் தெரியாது . பெருமாள்சாமியின் மகன் ஸ்ரீராமலுக்கு எத்தனை மனைவிகள் என்றால் ஒரு மனைவி. 1ம் பிரதிவாதியுடன் உடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால் இருவர் . அவர்கள் பெயர் ஜோதி , சரஸ்வதி, அவர்களுக்கு எப்போது திருமணமானது என்றால் எனக்கு தெரியாது . செல்வராஜ் அவரது சகோதரி சரஸ்வதி பராமரிப்பில் இருந்தார் என்றால் கூட இருந்தது தெரியும். இறந்த விவரம் தெரியாது . செல்வராஜ்க்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தில் ஊர் கூட்டத்திற்கு பெண்கள் செல்லமாட்டார்கள் என்றால் சரியல்ல . இருவரும்போவார்கள். எனக்கு தெரிந்து ஊர் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. நான் ஊர்கூட்டத்திற்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை . கூட்டம்போட்டால் போவேன் . கிருஷ்ணவேணி கையொப்பம் பார்த்தால் சொல்லமுடியுமா என்றால் இல்லை .1986 ல் நாச்சியார்பட்டி ஊர் நாட்டாமை யார் என்றால் அப்போது நான் எங்கள் ஊரில் இருந்ததால் எனக்கு தெரியாது. எனக்கு

(ஓம் / ) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

திருமணம் ஆன பிறகு நடந்த விவரங்கள்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . ஏற்கனவே தட்டச்சு செய்து வைத்திருந்த பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான் . கிருஷ்ணவேணி , செல்வராஜ், ஸ்ரீராமலு ஆகியோர் தனித்தனி வீடுகளில் குடியிருந்தார்கள்என்றால் சரிதான் . அந்த வீடுகளுக்கு அவர்அவர் பெயரில் தீர்வை மற்றும் பட்டா இருந்தது என்றால் சரிதான் . கிருஷ்ணவேணிக்கு 5 ஏக்கர் நிலம் கொடுத்திருந்தார்கள் என்றால் பிரித்து கொடுத்தார்களா என்று தெரியாது .ஆனால் அந்த இடத்தை அனுபவித்து வருகிறார் . மேற்படி சொத்தில் கிருஷ்ணவேணி பெயருக்கு எவ்வளவு ஏக்கருக்கு பட்டா உள்ளது என்றால் தனியாக பட்டா இல்லை கூட்டு பட்டாதான் உள்ளது . வாசாஆ-3 ல் தர்மராஜ் பெயரில் தனி பட்டா உள்ளது என்றால் சரிதான் . வாதிக்கு தனிபட்டா இல்லை . செல்வராஜ் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதை காட்டும் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் .செல்வராஜ் தனது சகோதரி சரஸ்வதிக்கு எழுதிகொடுத்த உயிலை மறைப்பதற்காக 1ம்வாதி சொல்லிக்கொடுத்து செல்வராஜ் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . 1ம்வாதியின் உறவினர் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 11th day of December 2023.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**(ஓம் / ) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**